செ.வெ.எண்: 81 / மே /2020 நாள்: 27.05.2020

**தமிழகத்தில் 6 மாவட்டங்களில் பணிபுரிந்து வந்த புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் திருச்சிராப்பள்ளி ரயில்வே ஜங்சனில் இருந்து பீகார் மாநிலத்தை சார்ந்த 839 நபர்கள் சிறப்பு ரயில் மூலம் பீகார் மாநிலத்திற்கு இன்று (27.5.2020) அனுப்பி வைக்கப்பட்டனர். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

-----------

தமிழக அரசு புலம்பெயர்ந்த தொழிலாளர்களை அந்தந்த மாநிலத்தில் உள்ள சொந்த ஊர்களுக்கு சிறப்பு இரயில் மூலம் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 248, அரியலூர் மாவட்டத்தில் 133, புதுக்கோட்டை மாவட்டத்தில் 157, பெரம்பலூர் மாவட்டத்தில் 148, திண்டுக்கல் 139, கரூர் 14, ஆகிய 6 மாவட்டங்களில் பணிபுரிந்த வந்த வெளிமாநில தொழிலாளர்கள் 339 நபர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழகத்தின் சிறப்பு பேருந்துகள் மூலம் சமூக இடைவெளியை கடைபிடித்து திருச்சிராப்பள்ளி இரயில்வே ஜங்சனுக்கு அழைத்து வரப்பட்டு மதிய உணவு, வாட்டர் பாட்டில், பிஸ்கட் போன்ற உணவு பொருட்கள் ஒவ்வொருக்கும் வழங்கப்பட்டு இன்று (27.05.2020) பீகார் மாநிலத்திற்கு சிறப்பு இரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் திரு.என்.விஸ்வநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.வடிவேல்பிரபு, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**